# குணமாலையார் இலம்பகத்தில் அகத்திணைக் கூறுகள்

*முனைவர் பா. பொன்னி*
துறைத்தலைவர் மற்றும் உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம்
மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

**மலர்: 4**

**இதழ்: 3**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2020**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

அகவாழ்வு உயிர்கள் அனைத்திற்கும் பொதுவானது. காதல் கொள்ளாத உயிர்களே இல்லை எனலாம். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான காதல் உணர்வு மலரும்போது அது வேறு எந்த உணர்வுகளையும்விட வலிமையானதாக மாறிவிடுகிறது. தம் காதல் கைகூடுவதன்பொருட்டு ஆணோ பெண்ணோ தம் இயல்புக்கு மாறான செயல்களில் ஈடுபடவும் ஆயத்தம் ஆகி விடுகிறார்கள். காதல் வாழ்வில் நிகழும் நிகழ்வுகளை இலக்கண ஆசிரியர்கள் பல்வேறுவகையாகக் குறிப்பிட்டுள்ளனர். தொல்காப்பியர் சுட்டும் அகத்திணைக் கூறுகள் சீவகசிந்தாமணியில் இடம்பெறும் குணமாலையார் இலம்பகத்தில் காணப்படும் தன்மையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### அகத்திணைக்கூறுகள்

குணமாலையார் இலம்பகத்தில் தொல்காப்பியர் சுட்டும் தூது, அறத்தொடு நிற்றல், மடலேறுதல், ஊடல் ஆகிய அகத்திணைக் கூறுகளைக் காணலாகின்றது.

### தூது

தூது என்னும் சொல்லிற்குத் தூது மொழி, காமக்கூட்டத்துக்குக் காதலரை இணைக்கும் செயல், செவிலி, பாணன் முதலிய உயர்திணைப் பொருளையேனும் கிள்ளை முதலிய அஃறிணைப் பொருளையேனும் ஊடல் போக்கும் வாயிலாகக்கொண்டு காதலர்பால் விடுத்தலைக் கலி வெண்பாவால் கூறும் பிரபந்தம் என்று விளக்கம் கொள்ளலாம். "ஒருவர் தம்முடைய உள்ளக் கருத்தைத் தமது காதலர், நண்பர், பகைவர் முதலியவர்களில் யாரேனும் ஒருவருக்குத் தக்க ஒருவர் வாயிலாகக் கூறி விடுவிப்பது தூது ஆகும்"[1]

"தூது என்பது ஒரு பிரபந்தம். அது, பாணன் முதலாகப் பாங்கன் ஈறாக விடுக்கும் உயர்திணை இருபாலினையும், கேளா மரபினவற்றைக் கேட்பனவாகக் கூறி விடுக்கும் அன்னமும், கிளியும், வண்டும், மயிலும், குயிலும் முதலாயின அஃறிணைப் பொருளையும், இளையகலாம், முதுகலாம் இவற்றின் துனி நீங்கற்கு வாயிலாக விடுத்தலைக் கலி வெண்பாவாற் கூறுவது"[2] என்பர். எனவே, பிரிந்திருப்போர் இருவரை இணங்குவிக்கும் செயல்பாடே தூது எனலாம்.

### பொது இலக்கணம்

பிரிவு பற்றி, "ஓதல் பகையே தூதிவை பிரிவே" என்பார் தொல்காப்பியர். உயர்ந்தோராகிய அந்தணரும், அரசரும் தூது செல்வதற்கு உரியவர்கள் என்றும் அவர் கூறுவார். இத்தகு தூதுக்கு உரியவர்களை வாயில்கள் என்றும் குறிப்பிடுவார். இதனைத்

**"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்**
**பாணன் பாடினி இளையோர் விருந்தினர்**
**கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்**
**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப"[3]**

என்ற நூற்பாவால் அறியலாம். மாந்தர்களைப் போல அஃறிணைப் பொருள்களைத் தூது விடுக்கும் மரபும் இருந்துள்ளது. அதனைச்

**"சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்**
**செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்"[4]**

என்ற நூற்பா சுட்டும். குணமாலையார் இலம்பகத்தில் சீவகன் மீது காதல்கொண்ட குணமாலை, தன் காதலை வெளிப்படுத்தும் முகமாக தான் வளர்க்கும் கிளியை அவனிடம் தூது போக வேண்டுகிறாள்.

**"தெளிக யம்மலர் மேலுறை தேவியின்**
**ஒளியுஞ் சாயலு மொப்புமை யில்லவள்**
**களிகொள் காமத்திற் கையற வெய்தித்தன்**
**கிளியைத் தூதுவிட் டாள்கிளந் தென்பவே"**
**(குணமாலையார் இலம்பகம்,பா.1001)**

என்ற பாடல் தெளிந்த நீருடைய பதுமையெனும் பொய்கையிலே உள்ள தாமரை மலர்மேல் வாழும் திருமகளைக் காட்டிலும் எழிலும் அழகும் உடைய ஒப்புவமையில்லாத குணமாலை, மையலூட்டும் காமத்தால் செயலற்று வருந்தித் தானுற்ற வருத்தத்தை வெளிப்படையாகக் கூறி, தன் கிளியைத் தூது போக விடுத்தாள் என்பதனை விளக்குகிறது.

### அறத்தோடு நிற்றல் நிலை

"அறன்" என்பது பல பொருள்களைக் கொண்டிருந்தாலும், பெண்ணுக்கு உரிய முதற்பண்பான கற்பையே குறிக்கும். "அறவழியில் நின்று, களவொழுக்கத்தைப் பெற்றோர்க்கு வெளிப்படுத்துதல்" என்பதே இத்துறையின் பொருளாகும்.
தொல்காப்பியர்,

**"ஐயச்செய்கை தாய்க்கெதிர மறுத்துப்**
**பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்**
**அவன் விலங்குறினுங் களம்பெறக் காட்டினும்**
**பிறன்வரை வாயினும் அவன்வரை மறுப்பினும்**
**முன்னிலை யறனெனப் படுதலென் றிருவகைப்**
**புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்"[5]**

என்ற ஏழு சூழல்களில் அறத்தொடு நிற்றல் நிகழும் என்று குறிப்பிடுகிறார். அறத்தோடு நிற்கும் முறையும் ஒருவித ஒழுங்கிலேயே நடைபெறும். தலைமகள் தோழிக்கும், தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தை தன்னையர்க்கும் களவொழுக்கச் செய்தியை வெளிப்படுத்துவர் என்று இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடுவர்.

**"தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும்
பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்கும்
செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்கும்
நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு
நிற்கும் என்ப நெறியுணர்ந் தோரே"[6]**

என்று நம்பி அகப்பொருள் சுட்டும்.

**"கந்துகப் புடையிற் பொங்குங் கலினமா வல்லன் காளைக்
கெந்தையும் யாயு நேரா ராய்விடி னிறத்த லொன்றோ
சிந்தனை பிறிதொன் றாகிச் செய்தவ முயற லொன்றோ
வந்ததா னாளை யென்றாள் வடுவெனக் கிடந்த கண்ணாள்"**

***(குணமாலையார் இலம்பகம், பா. 1050)***

என்ற பாடலில் குணமாலை தன்னுடைய செவிலித்தாயிடம் "அடித்த பந்தினைப் போல் விரைந்து செல்லுகின்ற குதிரையைச் செலுத்த வல்லானாகிய காளை சீவகனுக்கு என்னை, என் தாயும் தந்தையும் மணஞ்செய்து கொடுக்கச் சம்மதிக்கவில்லையென்றால், இறந்துபடுதலோ அல்லது சிந்தை வேறொன்றும் அன்றாகித் தவம் மேற்கொள்ளுதலோ ஆகிய இந்த இரண்டில் ஒன்றுதான் நாளை நடக்கப் போகிறது" என்று குறிப்பிட்டு அறத்தொடு நிற்கின்றாள். செவிலித்தாயும் அவளது காதலினை ஏற்றுக்கொண்ட தன்மையை,

**"தேனெய்போன்றினியசொல்லாள் சிறுமுதுக்குறைமைகேட்டே
ஊனைநைந் துருகிக் கைத்தா யுண்ணிறை யுவகை பொங்க
ஆனெய்பாற் கிவர்ந்த தொத்த தழேற்கவென் பாவை யென்று
தூனையாற்றடங்கணீரைத்துடைத்துமெய் தழுவிக் கொண்டாள்"**

***(குணமாலையார் இலம்பகம்,பா.1051)***

என்ற பாடலால் அறியலாகின்றது. குணமாலையின் காதலை ஏற்றுக்கொண்ட செவிலித் தாய் அதனை நற்றாயிடம் கூற நற்றாய் தன் கணவனிடம் கூற அறத்தொடு நிற்கும் முறை குணமாலையார் இலம்பகத்தில் வரிசைமுறைப்படி அமைவதனைக் காணலாகின்றது.

**"துகண்மனத் தின்றி நோற்ற தொல்வினைப் பயத்தி னன்றே
தகணிலாக் கேள்வி யான்கட் தங்கிய தென்று பின்னும்
மகண்மனங் குளிர்ப்பக் கூறி மறுவலும் புல்லிக் கொண்டாங்
ககன்மனைத் தாய்க்குச் சொன்னாள வளுந்தன்கேட்குச் சொன்னாள்"**

***(குணமாலையார் இலம்பகம், பா. 1052)***

என்ற பாடல் இதனை விளக்குகின்றது. இதன்வழி அறத்தொடு நிற்கும் படிநிலை குணமாலையார் இலம்பகத்தில் வரிசைமுறைப்படி அமைந்திருப்பதனை அறியலாகின்றது.

**ஊடல்**

சங்க இலக்கியத்தில் கற்புக்காலத்தில் தான் ஊடல் குறிக்கப்படுகிறது. பரத்தைவயிற் பிரிவாலேயே மிகுதியும் ஊடல் நிகழ்கிறது. ஊடல், புலவி, துனி என்று மூன்று நிலைகளில் தலைவன் தலைவிக்கு இடையிலான மனவேறுபாடு சுட்டப்படும். ஊடல் என்பது அண்மைக் காலத்தது, புலவி அதனினும் மிக்கது, துனி உச்சமாகும். ஊடல் காலத்தில் தலைவி தனது உள்ளத்தில் உள்ள அன்பினை மறைத்துக்கொண்டு வேறுபொருள் தோன்றும் சொற்களால், தனது பணிவை அவனுக்குக் காட்டுவாள்.

**"அருள்முந் துறுத்த அன்புபொதி கிளவி
பொருள்பட மொழிதல் கிழவோட்கும் உரித்தே"[7]**

என்ற நூற்பாவால் இதனை அறியலாம். புலவிக் காலத்தில் இவ்வாறு மனைவியின் உயர்வும், கிழவோன் பணிவும் நிகழ்தல் முறையாகும் என்பதை,

**"மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்**
**நினையுங் காலைப் புலவியுள் உரிய"[8]**

எனும் நூற்பா விளக்குகிறது. மற்றோர் இடத்தில்,

**"கொடுமை யொழுக்கம் கோடல் வேண்டி**
**அடிமேல் வீழ்ந்த கிழவன்"[9]**

என்றும் குறிப்பிடப்படுகிறது. குணமாலையார் இலம்பகத்தில் குணமாலையின் மீது காதல் கொண்ட சீவகன் அவளது உருவத்தை ஓவியமாக வரைகின்றான். அப்போது அங்கு வந்த வாசவதத்தை அவ்வோவியத் தில் வரையப்பட்டிருக்கம் குணமாலையின் வடிவத்தைக் கண்டு பொறாமைகொண்டு சீவகனுடன் ஊடல் கொள்கிறாள்.

**"பேரினும் பெண்டிரைப் பொறாது சீறுவாள்**
**நேர்மலர்ப் பாவையை நோக்கி நெய்சொரி**
**கூரழல் போல்வதோர் புலவி கூர்ந்ததே**
**ஆர்வுறு கணவன்மாட் டமிர்தின் சாயற்கே"**

**(குணமாலையார் இலம்பகம்,பா.1018)**

என்ற பாடல் தன்னையல்லாமல் வேறு ஒரு பெண்ணின் பெயரைச் சொன்னாலும், பொறுக்கமாட்டாது கோபிக்கின்ற தத்தை, ஓவியத்தில் வரைந்துள்ள திருமகளைப் போன்ற குணமாலையின் உருவை நேருக்கு நேராகப் பார்த்ததும், நெய்யை விடுவதால் மேலும் பற்றி எரிகின்ற எரி நெருப்புப் போல, ஆர்வம்-விருப்பம் மிகுந்த சீவகனுக்கு அமுதம்போல் இன்பம் அளிப்பவளாகிய அவளுக்கும் ஊடல் மிகுந்ததன்மையை விளக்குகிறது.

### மடலேறுதல்

தமிழ் அகப்பொருள் நூல்களில் "மடல்" என்பது ஒரு துறையாகக் காணப்படுகிறது. அத்துறை படிப்படியாக வளர்ந்து சிற்றிலக்கிய நிலை பெற்றது. மடலேறுவதைக் குறித்து, "தலைவன் ஒவ்வாக் காமத்தால், பனங்கருக்காற் குதிரையும், பனந்தருவினுள்ளவற்றால், வண்டில் முதலானவும் செய்து, அக்கு திரையின் மேலேறுவது. மடலேறுவான், திகம்பரனாய் உடலெங்கும் நீறு பூசிக் கிழி ஓவியர் கைபடாது, தானே தீட்டிக் கிழியின் தலைப்புறத்தில் அவள் பேரை வரைந்து கைப்பிடித்து, ஊர் நடுவே நாற்சந்தியில் ஆகாரம் நித்திரையின்றி அக்கிழிமேற்பார்வையும், சிந்தையும் இருத்தி, வேட்கை வயத்தனாய், வேறு உணர்வின்றி, ஆவுரினும் அழல் மேற்படினும் அறிதலின்றி மழை, வெயில் காற்றான் மயங்காதிருப்புழி, அவ்வுரிலுள்ளார் பலரும் கூடி வந்து, நீ மடலேறுதியோ? அவளைத் தருதும் சோதனை தருதியோ? என்ற வழி, இயந்தானாயின், அரசனுக்கறிவித்து, அவனேவலால் அவன் இணைந்து, நையத் தந்து, மடலேறென்ற வழி, ஏறும் முறைமை: பூளை, எலும்பு, எருக்கு இவைகளாற் கட்டிய மாலை அணிந்துகொண்டு அம்மாவிலேற, அவ்வடத்தை வீதியில் ஈர்த்தலும் அவ்வுருளை யுருண்டோடும்பொழுது, பனங்கருக்குஅறுத்த இடமெல்லாம் இரத்தந் தோன்றாது வீரியம் தோன்றின், அப்போது அவளை அலங்கரித்துக் கொடுப்பது. இரத்தங்கண்டுழி அவனைக் கொலை செய்துவிடுவது. இவை புலவரால் நாட்டிய வழக்கென்று உணர்க"[10] என்று தஞ்சை வாணன் கோவை குறிப்பிடுகின்றது. அதற்கு முன்பே, தொல்காப்பியத்தில் மடல் பற்றிய செய்தியைக் காணமுடிகிறது. மடலேறுதல் பெருந்திணைக்கு உரியது என்பதையும், அம்மடலேற்றம் பெண்களுக்கு உரியது அன்று என்பதையும் தொல்காப்பியர்,

**"ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்**
**தேறுத லொழிந்த காமத்து மிகுதிறம்**
**மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்**
**செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே"[11]**

என்ற நூற்பாவில் சுட்டுகிறார். பெண்கள் மடலேறக் கூடாது என்பதனையும்

**"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்**
**பொற்புடை நெறிமை இன்மை யான"**[12]

என்ற நூற்பாவில் சுட்டுகிறார். இவற்றால், அக்காலச் சமூகம் மகளிர் மடலேறுவதை விலக்கி, ஆண்கள் மடலேறுவதை ஏற்றுக் கொண்டது எனலாம். ஆனால் சீவகன் மேல்கொண்ட காதல் உணர்வினால் குணமாலை மடலேறியாவது அவனை அடைய வேண்டும் என்று எண்ணுகிறாள்.

**"சோலை வேய்மருள் சூழ்வளைத் தோளிதன்**
**வேலை மாக்கடல் வேட்கைமிக் கூர்தர**
**ஓலை தாழ்பெண்ணை மாமட லூர்தலைக்**
**கால வேற்றடங் கண்ணி கருதினாள்"**

**(குணமாலையார் இலம்பகம், பா. 999)**

என்ற பாடல் இதனை விளக்குகின்றது. சோலையில் தழைத்த மூங்கிலென்று கண்டவர் மருளும் வளையணிந்த தோளும், எமன் கை வேல் போன்ற பெரிய கண்களும் உடைய குணமாலை, கரை உடைய கடலைக் காட்டிலும் அதிக அளவிலே உண்டான காதல் விருப்பம் மீதூற ஆடவர்க்குரிய பனைமடலால் செய்த குதிரை மேலேறி மடல் ஊர்வதாகிய செயலை, பெண்ணாயிருந்தும் தான் மேற்கொள்ள நினைத்தாள் என்பது மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது தவிர குணமாலை மடலேறியதாகக் காப்பியத்தில் அமைக்கப்படவில்லை.

சீவகன் மீது காதல்கொண்ட குணமாலையின் காதல் உணர்வு வெளிப்பாட்டில் தொல்காப்பியர் சுட்டும் அகத்திணைக் கூறுகளைக் காணமுடிகிறது. சீவகன் மேல் கொண்ட காதல் உணர்வினால், அவன் மனநிலையை அறிந்துகொள்ள கிளியைத் தூதாக அனுப்புதல், தன்னுடைய காதலை செவிலிக்கு உணர்த்தி அதன் வழியாகப் பெற்றோருக்குத் தன் களவு வாழ்வினை வெளிப்படுத்தல், தொல்காப்பிய மரபில் இருந்து மாறி மிகுதியான காதல் உணர்வினால் மடல் ஏறியாவது சீவகனை அடைய நினைத்தல் ஆகிய அகத்திணைக் கூறுகளை குணமாலையார் இலம்பகத்தில் காண முடிகிறது.

## சான்றெண் விளக்கம்

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 10, ப.174.
2. தமிழ்ப்பேரகராதி,பாகம் -3, ப.1303.
3. தொல்.கற்பு. நூ-55.
4. தொல்.பொருள். நூ -2.
5. தொல்.களவு நூ.112.
6. நாற்கவிராசநம்பி, நம்பி அகப்பொருள் நூ-48.
7. தொல்.கற்பு. நூ-20.
8. தொல்.பொருள். நூ-31.
9. தொல்.களவு. நூ-40.
10. சொக்கப்ப நாவலர் (உ.ஆ.) தஞ்சை வாணன் கோவை ப.111.
11. தொல்.பொருள். நூ-54.
12. தொல்.அகத்திணையியல். நூ-38.